# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 09.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.16467/F/2024**

திரு க. கலைச்செல்வன் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
திருமானூர் - 621 715, அரியலூர் மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 13.08.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 19.09.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 17.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (09.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு க. கலைச்செல்வன் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி இரா. லதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், திருமானூர், அரியலூர் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், திருமானூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள் பணியில் சேர்ந்து கடந்த 01.01.2024 முதல் 12.08.2024 வரையில் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் பெறப்பட்டமொத்த மனுக்களின் எண்ணிக்கை பற்றிய விவரம், மேற்படி பெறப்பட்ட மனுக்களில் எத்தனை மனுக்களுக்கு பதில் வழங்கப்பட்டது மற்றும் எத்தனை மனுக்களுக்கு பதில் வழங்காமல் நிலுவையில் உள்ளது என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 3 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (09.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தான் கோரிய தகவல்களை ந.க.எண்.ஆ1/2040/2024 நாள் 02.04.2025 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலரின் வாயிலான தனக்கு வழங்கிவிட்டதாக இன்றைய விசாரணையின்போது ஆணையத்தில் தெரிவித்து, தனது வழக்கினை முடித்துக்கொள்ளுமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார். ஆணையம் அதனை பதிவு செய்து, மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.16467/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
திருமானூர் - 621 715, அரியலூர் மாவட்டம்.

**<u>வழக்கு எண்.SA.16467/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு க. கலைச்செல்வன், த/பெ.சி. கருப்பையா,
எண்.4/66, வடக்கு தெரு,
கீழக்காவமடாங்குறிச்சி (கி),
அரியலூர் வட்டம் & மாவட்டம் - 621 715.

Copy to: File
SNPS / 11.04.2025